

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2051 | நவம்பர் 19, 2020 | புரட்சி 19 | முழக்கம் 17 | விலை: ரூ.3.00

## ‘சூரப்பா’வைப் போற்று!

*சூரப்பா, அண்ணா பல்கலைக்கழக துணைவேந்தர் பதவியிலிருந்து விலக மறுக்கிறார்; அடம் பிடிக்கிறார்.*

*“அய்யா; தங்களது துணைவேந்தர் நிர்வாகத்தில் தற்காலிக ஆசிரியர் நியமனங்களில் ரூ.80 கோடி கை மாறியிருக்கிறது என்று அரசு நியமித்துள்ள விசாரணை ஆணையிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளதே, அதற்கு அடிப்படை ஆதாரங்கள் இருக்கின்றன என்றும் அதே அரசாணை கூறுகிறதே; மகளுக்கு முறைகேடாக பல்கலை யிலேயே மரபுகளுக்கு மாறாக பதவி வழங்கியிருக்கிறீர்களே! இவ்வளவுக்குப் பிறகும் பதவி விலகினால் தானே நீதிபதி கலையரசன் குழு முறையாக விசாரணை நடத்த முடியும்?” என்று சூரப்பாவிடம் கேட்டுப் பாருங்கள்; அவர் தயாராகவே பதிலடி வைத்திருப்பார்!*

*“நான் கருநாடகத்திலிருந்து தமிழ்நாடு ஆளுநரால் நேரடியாக தேர்வு செய்யப்பட்டவன்; தமிழக அரசு ஆலோசனை கேட்டா நியமிக்கப்பட்டேன்? அண்ணா பல்கலைக்கழகம் இப்போ எனது சொத்து; அதாவது நம்முடைய சேர சோழர் பாண்டியர் எல்லாம் அந்தக் காலத்தில் ‘பிராமணர்’களுக்கு கிராமங்களையே தானமாகத் தந்தார்களே, அதுபோல; அதை உலகத் தரத்துக்கு உயர்த்த தமிழக அரசிடமா அனுமதி கேட்டேன்? நேரடியாக மத்திய கல்வித் துறைக்குத் தான் கடிதம் எழுதினேன்! தரம் உயர்த்த நானே நிதியை ஏற்பாடு செய்து கொள்வேன் என்று கூறியவன் நான். அரசிடமிருந்து சல்லிக்காசு வேண்டாம் என்றேன். தமிழ்நாடு அரசு என் மீது எப்படி விசாரணை நடத்த முடியும்? இந்த அரசுக்கு என்ன உரிமை இருக்கிறது?” என்று சூரப்பா அனல் கக்குவார்.*

*“அப்படி எல்லாம் பேசக் கூடாது; நீங்கள் ஊழலை ஒழிப்பதற்காகவே ஆளுநரால் நியமிக்கப்பட்டதாக பா.ஜ.க. வினர் உங்களுக்காகப் பேசினார்கள். இப்போது உங்கள் மீதே ஊழல் குற்றச்சாட்டு. பதவி விலகி விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டாமா?” என்று கேட்டுப் பாருங்கள்!*

*‘முடியாது; வேண்டுமானால் பதவி நீக்கம் செய்து பார்க்கட்டுமே!” என்று சவால் விடுவார்.*

*“அய்யா, இலஞ்ச ஒழிப்பு சூரரே! உலகத் தரத்துக்கு பல்கலைக்கழகத்தை உயர்த்தத் துடிக்கும் உத்தமரே! ஏற்கனவே தமிழ்நாட்டில் முறைகேடு ஊழல் புகார்கள் வந்தபோது இராதாகிருஷ்ணன் (கோவை அண்ணா பல்கலைக்கழகம்), மன்னர் ஜவகர் (சென்னை அண்ணா பல்கலைக்கழகம்) ஆகியோர் பணியிடை நீக்கம் செய்யப்பட் டிருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமா?” என்று கேட்டுப் பாருங்கள்!*

*“எல்லாம் தெரியும்; அவர்கள் கதை வேறு; என் கதை வேறு; நான் ஆர்.எஸ்.எஸ். குடும்பத்திலிருந்து வந்தவன். விசுவ இந்து பரிஷத்தில் வேலை செய்தவன்; ஆளுநரின் ஆசி பெற்றவன்; பகவத் கீதையை பாடத் திட்டத்தில் சேர்த்தவன்” என்று பதிலடி கொடுப்பார்.*

*சரி; தமிழக பா.ஜ.க.வினரிடம் கேட்டால், அவர்கள் என்ன கூறுவார்கள்?*

*“ஒரு ஊழலும் நடக்கவே இல்லை; விசாரணை முடிவு இன்னும் வரவில்லையே! கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் என்றால் விசாரணை நடத்துவீர்களா? சூரப்பா, ஒரு இந்து என்பதால் அவரைப் புண்படுத்தலாமா? எப்போதுமே தி.மு.க. இந்து எதிர்ப்புக் கட்சி; அதனால்தான் சூரப்பா என்ற இந்துவைப் புண்படுத்துகிறார்கள். தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணி இருந்தபோது இவர்கள் என்ன செய்தார்கள் என்பது எங்களுக்குத் தெரியாதா? அண்ணா பல்கலைக் கழகத்தைக் கொண்டு வந்ததே தி.மு.க. தானே! அப்படி ஒரு பல்கலைக் கழகமே இல்லாமலிருந்தால் சூரப்பா துணை வேந்தராகியிருப்பாரா? ஊழலைத்தான் செய்திருப்பாரா!”*

*– என்று வரலாற்று ஆதாரங்களை அள்ளி வீசுவார்கள்.*

*ஆளுநரிடம் போய் கேளுங்கள்.*

*“என் அனுமதியின்றி துணைவேந்தரை விசாரிக்க முடியுமா? சட்ட நிபுணர்களிடம் ஆலோசனை கேட்டிருக் கிறேன்; விளக்கம் கிடைக்க நான்கு அல்லது அய்ந்து வாரங்கள் ஆகலாம், நான்கு அல்லது அய்ந்து வருடங்கள் வரை அது மேலும் நீடிக்கவும் வாய்ப்பு உண்டு. அதற்குப் பிறகு இது குறித்த முடிவு எடுப்பேன்.”*

*மத்திய அரசு அதிகார வட்டாரங்களில் கேட்டுப் பாருங்கள்!*

*“பெரிய ஊழல் என்றால் பெரிய மாநிலத்துக்கும்; சிறிய ஊழல் என்றால் சிறிய மாநிலத்துக்கும் சூரப்பாவை ஆளுநராக நியமிக்க பரிசீலிக்கிறோம். இவரைவிட ஆளுநர் பதவிக்கு சரியான ஒருவர் சிக்க மாட்டார்” என்பார்கள்.*

*சிவப்பாக இருப்பவன் பொய் பேச மாட்டான்; பா.ஜ.க.வும் அதைச் செய்யாது என்று நம்புவோமாக!*

**– கோடங்குடி மாரிமுத்து**

# ‘உயர்ஜாதி ஏழை’ ஒதுக்கீட்டை தமிழகத்தில் திணிக்க சதியா?

வாக்கு அரசியலுக்கு பிற்படுத்தப்பட்டோர் உரிமை பேசுவதும், சமூகநீதியில் அதே மக்களுக்கு குழி பறிப்பதுமான இரட்டை வேடம் தான் பா.ஜ.க.வின் கொள்கை. அதைத் தான் “பேச நா இரண்டுடையாய் போற்றி” என்று ‘ஆரிய மாயை’ நூலில் அண்ணா முகவுரையாகக் கவிதை நடையில் பதிவு செய்தார்.

மருத்துவப் படிப்புக்கான ‘நீட்’ திணிப்பு; அகில இந்திய கோட்டாவில் பிற்படுத்தப் பட்டோர் ஒதுக்கீடு மறுப்பு; உயர்ஜாதி ஏழைகளுக்கு 10 சதவீத ஒதுக்கீடு வழங்குவதில் தீவிர முனைப்பு; ‘நீட்’டால் தேர்ச்சி பெற்ற அரசுப் பள்ளி மாணவர் களுக்கு 7.5 சதவீத ஒதுக்கீட்டுக்கு அனுமதி யளிக்க ஆளுநர் வழியாக முட்டுக் கட்டை; உயர்ஜாதி ஏழைகளுக்கான ஒதுக்கீட்டை தமிழ்நாட்டில் திணிக்க மறைமுக நிர்ப்பந்தம் என்று நடுவண் அரசின் ஒவ்வொரு செயல்பாடும் சமூகநீதிக்கு குழி பறிப்பதுதான். ஆனால் கட்சித் தலைவர் தலித் என்பார்கள்; வேல் யாத்திரைக்கு பிற்படுத்தப்பட்டோரை திரட்டுவார்கள்.

உயர்ஜாதி ஏழைகளுக்கான 10 சதவீத இடஒதுக்கீடு மாநில அரசுகளின் விருப்பம் சார்ந்தது. சட்டப்படி மாநிலங்களைக் கட்டாயப்படுத்த முடியாது. தமிழ்நாட்டில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, இந்த ஒதுக்கீட்டை அமுல்படுத்துவது இல்லை என்ற நல்ல முடிவு எடுத்துள்ளது. ஆனால், மறை முகமாக நடுவண் ஆட்சி கட்டாயப்படுத்தி வருகிறது. சென்னையில் கலைஞர் கருணாநிதி நகரில் 2011-12இல் மருத்துவக் கல்லூரி ஒன்று (ஈ.எஸ்.அய்.சி. கல்லூரி) 100 இடங்களுடன் தொடங்கப்பட்டது. எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள கல்லூரி. இந்த ஆண்டு இந்திய மருத்துவக் கழகம் 100 இடங்களை 125 இடங்களாக உயர்த்திக் கொள்ள அனுமதி வழங்கியது. ஆனால், உயர்ஜாதி ஏழைகளுக்கான 10 சதவீத ஒதுக்கீட்டை அமுல்படுத்த வேண்டும் என்று நிபந்தனை விதித்துள்ளது. (ஆதாரம்: ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நவம். 2, 2020) ஈ.எஸ்.அய். தொழிலாளர் வைப்பு நிதியில் அந்தத் தொழிலாளர் நலனுக்காக உருவாக்கப்பட்ட இந்தக் கல்லூரியில் மொத்தமுள்ள 125 மருத்துவப் படிப்புக்கான இடங்களில் 25 இடங்கள் வைப்பு நிதி செலுத்தும் தொழிலாளர் குடும்பங்களுக்கு ஒதுக்க வேண்டும். நடுவண் ஆட்சி அகில இந்திய கோட்டாவின் கீழ் 19 இடங்களை எடுத்துக் கொண்டு விட்டது. மாநில அரசுக்கான 81 இடங்களை ஒற்றைச் சாளர முறையில் நிரப்ப வேண்டும். இந்த நிலையில் தமிழ்நாட்டில் உயர்ஜாதி ஏழை களுக்கான இடஒதுக்கீடு பின்பற்றப்படாத நிலையில் அந்த 10 சதவிகித இடங்களை எப்படி நிரப்புவது? நீட் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு 69 சதவீத இடஒதுக்கீடு முறையில் மட்டுமே இடங்களை நிரப்ப முடியும் என்ற நிலையில் தமிழக அரசு ஏற்றுக் கொள்ளாத சமூக நீதி தத்துவத்தையே சீர்குலைக்கும் ஒரு இட ஒதுக்கீடு முறையை கொல்லைப்புற வழியாக திணிப்பதில் ஏன் நடுவண் ஆட்சி இப்படி துடிக்கிறது?

நீட் தேர்வை எதிர்ப்பவர்கள் தனியார் மருத்துவக் கல்லூரிகளின் கல்வி வணிகத்துக்கு துணைப் போகிறவர்கள் என்றும் அவர்கள் கொள்ளை அடிப்பதைத் தடுக்கவே ‘நீட்’ கொண்டு வரப்பட்டுள்ளது என்றும் பா.ஜ.க.வினர் நியாயம் பேசினார்கள். உண்மையில் தமிழ்நாடு சட்டமன்றம் ‘நீட்’டிலிருந்து விலக்குக் கேட்டதே, அரசு மருத்துவக் கல்லூரி களுக்குத் தானே தவிர, தனியார் மருத்துவக் கல்லூரிகளுக்கும் நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களுக்கும் அல்ல; ஆனாலும் ‘நீட்’ தேர்வு, தனியார் மருத்துவக் கல்லூரிகள், நிகர்நிலைப் பல்கலைக் கழகங்களின் வணிகக் கொள்ளையைத் தடுத்து நிறுத்த வில்லை என்பதே உண்மை.

மிக உயர்ந்த ‘கட்-ஆப்’ மார்க் பெறும் மாணவர்களைவிட மிகக் குறைவான ‘கட் ஆப்’ மதிப்பெண் பெறும் மாணவர்கள் நிகர்நிலைப் பல்கலைக்கழக மருத்துவ கல்லூரிகளிலேயே நிர்வாகத்துக்கான ஒதுக்கீட்டில் முதல் சுற்றில் இடம் பிடித்து வருகிறார்கள். நடப்பு ஆண்டு மிக அதிகபட்ச ‘கட்ஆப்’ 720 ஆக நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இதில் திறந்த போட்டி யாளருக்கு ‘கட்ஆப்’ 618; பட்டியல் இனப் பிரிவினருக்கு 521; பழங் குடியினருக்கு 492; இது கடந்த ஆண்டுகளைவிட அதிகம். ஆனால், மிகக் குறைந்த ‘கட்-ஆப்’ ஆக மருத்துவக் கல்லூரியில் ‘183’ மதிப்பெண் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு இடைவெளியை ஏன் மருத்துவக் கவுன்சில் நிர்ணயிக்கிறது? தனியார் மருத்துவக் கல்லூரிகளில் இடங்கள் நிரம்ப வேண்டும்; அவர்கள் வணிகம் செழிக்க வேண்டும் என்பதால் தானே! இந்த ஆண்டு 183 ‘கட்ஆப்’ மதிப்பெண் மட்டுமே பெற்ற ஒரு மாணவர் சென்னை மீனாட்சி மருத்துவக் கல்லூரியில் முதல் சுற்றிலேயே இடம் பிடித்து விட்டார். அந்தக் கல்லூரியில் ஓராண்டு கல்விக் கட்டணம் 22.5 இலட்சம் ரூபாய். மிகக் குறைந்த மதிப்பெண்; மிக மிகக் கூடுதலான கல்விக் கட்டணம். ஆக, தனியார் மருத்துவக் கல்லூரி வணிகத்துக்கு எதிராகவே நீட் தேர்வு கொண்டு வரப் பட்டது என்ற வாதம் மிகப் பெரும் மோசடி அல்லவா?

7.5 சதவீத அரசுப் பள்ளி மாணவர் களுக்கு உள் ஒதுக்கீடு செய்யப் பட்டதால் இந்த ஆண்டு 405 பேருக்கு வாய்ப்புகள் கிடைக்கும் என்று தகவல்கள் கூறுகின்றன. கடந்த ஆண்டு அரசுப் பள்ளி மாணவர் களுக்குக் கிடைத்த இடங்கள் இரண்டு மட்டுமே. இந்த உள் ஒதுக்கீட்டுக்கு ஒப்புதல் தருவதற்கே ஆளுநர் இழுத்தடித்து ‘உயர்ஜாதி ஏழைகளுக்கு’ ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று நிபந்தனை விதித்தார் என்ற தகவல்கள் கசிந்தன. கடைசியில் அரசே ஆணை பிறப்பித்த பிறகே ஆளுநர் ஒப்புதல் தரும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

‘நீட்’ தேர்வே இல்லாத ஒரு நிலை தமிழகத்தில் இருக்க வேண்டும். ‘உள் ஒதுக்கீடு’ ஒரு தற்காலிகப் பாதுகாப்பு தான் என்றாலும், அதுவே முழுமையான தீர்வாகிட முடியாது. அதே நேரத்தில் நடுவண் ஆட்சியின் துரோகங்களையும் இரட்டை வேடத்தையும் மக்களிடம் விளக்குவதோடு தமிழ்நாடு பெரியாரின் சமூக நீதி மண் என்பதை மேலும் உறுதியாக்குவோம்.

இந்துக்களுக்கான உரிமையாளர்களாக புனித வேடம் போடுவோர் அதே இந்துக்களின் சமூக நீதியை மறுப்பதற்குப் பெயர் தான் - பார்ப்பனியம்!

**தலையங்கம்**

## அருந்ததிராய் நூலுக்குத் தடையா?

மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. மாணவர்களுக்கு விருப்பப் பாடமாக வைக்கப் பட்ட அருந்ததிராய் நூல் துணைவேந்தர் பிச்சுமணி என்பவரால் திடீரென்று நீக்கப்பட்டிருக்கிறது. ‘ஏ.பி.வி.பி’ எனும் விசுவ இந்து பரிஷத் அமைப்பு தந்த புகாரின் அடிப்படையில் பல்கலைக்கழக நிர்வாகக் குழுக்களின் ஆலோசனை பெறாமலேயே ஆளுநரால் நியமிக்கப்பட்ட துணைவேந்தர் தன்னிச்சையாக முடிவெடுத்து விட்டார். ஆர்.எஸ்.எஸ். எதை விரும்பவில்லையோ, அது பாடத் திட்டத்திலும் இடம் பெறக் கூடாது என்ற நிலைக்கு பல்கலைக்கழகங்கள் வந்து விட்டன. ‘தோழர்களுடன் ஒரு பயணம்’ என்ற அந்த நூல், அருந்ததிராய் தண்டகாரண்யப் பகுதியில் மாவோயிஸ்டுகளுடன் நடத்திய உரையாடல்களையும் அவர்கள் வாழ் நிலையையும் விவரிக்கிறது. அருந்ததிராய் உலகமறிந்த எழுத்தாளர்; புக்கர் விருது பெற்றவர்.

அருந்ததிராயின் நூல் தடை செய்யப்பட்ட நூலும் அல்ல. ‘நான்கு வர்ணத்தை’ நியாயப்படுத்தி அந்த தர்மத்தைக் காக்க கொலை செய்வது பாவமல்ல என்று கூறும் கீதை கல்லூரிகளில் இடம்பெறும்போது இந்த நூலுக்கு மட்டும் தடை போடுவது என்ன நியாயம்? இராமாயணங்கள்கூட 15க்கு மேல் இருக்கின்றன. ஒவ்வொரு இராமாயணமும் ஒவ்வொரு கதையைக் கூறுகிறது. இதை பேராசிரியர் இராமானுஜம் என்ற ஆய்வாளர் தொகுத்திருந்தார். டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தில் இடம் பெற்றிருந்த அந்தப் பாட நூலை இதே ‘அகில இந்திய விசுவ பரிஷத்’காரர்களின் எதிர்ப்பால் நீக்கி விட்டனர். அப்போது பல்கலைக்கழக வளாகத்தில் மனுசாஸ்திரத்தை எரித்து மாணவர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தினர். கருநாடக பா.ஜ.க. ஆட்சி திப்பு சுல்தான் வரலாற்றைப் பாடநூலிலிருந்து நீக்கியது. திப்பு, பிரிட்டிஷ் இராணுவத்தை எதிர்த்துப் போராடியவர். முதன்முதலாக பீரங்கி ஏவுகணைகளைப் பயன் படுத்தியவர். இந்துக்களின் 158 கோயில்களுக்கு நிதி உதவி அளித்து அரசு நிலங்களை நன்கொடையாக வழங்கியவர். 1791இல் திப்புவுடன் பேஷ்வா பார்ப்பன மன்னர் மாதவ் ராவின் மராத்திய இராணுவம் போரிட்டபோது சிருங்கேரி சங்கர மடத்தையும் மடத்தின் கோயிலையும் இடித்துத் தள்ளியது. இதைச் செய்தது பேஷ்வா பார்ப்பனரின் ‘இந்து’ இராணுவம். அப்போது சிருங்கேரி சங்கராச்சாரி, திப்பு சுல்தானிடம் தான் உதவி கேட்டார். 80 கடிதங்களை எழுதினார். திப்பு தான் பார்ப்பன சிருங்கேரி மடத்தை புணரமைப்பதற்கு நிதியுதவி செய்து பணியாளர்களையும் நியமித்தார். ஆனாலும் பா.ஜ.க.வும், ஆர்.எஸ்.எஸ்.சும் பேஷ்வாக்களை ஆதரித்ததே தவிர, திப்புவை எதிரியாகக் கருதி இந்த வரலாறுகளை பாடநூலில் சேர்க்கக் கூடாது என்று கூறி தடை போட்டது.

மகாராஷ்டிரா மாநில அரசு வெளியிட்ட அம்பேத்கர் தொகுப்பில் இடம் பெற்றிருந்த ‘இந்து மதத்தின் புதிர்கள்’ என்ற கட்டுரைகள் தொகுப்பை நீக்க 1987இல் மகாராஷ்டிராவில் பார்ப்பனர் – சிவசேனா – ஆர்எஸ்.எஸ்.காரர்களிடமிருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியது. முதலில் நீக்க முன் வந்த காங்கிரஸ் ஆட்சி, தலித் தலைவர்கள் எதிர்வினைகளுக்குப் பிறகு மீண்டும் தனது முடிவை மாற்றியது. அப்போது ஆர்.எஸ்.எஸ்.சும் சிவசேனையும் மீண்டும் போர்க்கொடி உயர்த்திய தோடு, தாங்கள் நடத்திய அம்பேத்கர் நூல் எதிர்ப்புப் பேரணிக்குத் தந்த பத்திரிகை விளம்பரங்களில், “கலப்பு இரத்தம் இல்லாத இந்துக்கள் மட்டும் பேரணியில் பங்கேற்க வேண்டும்” (14.1.1988, இந்தியன் எக்ஸ்பிரஸ்) என்று அறிவித்து ‘தலித்’ மக்களை ஜாதி கெட்டவர்கள் ‘இந்துக்கள் அல்ல’ என்று இறுமாப்போடு சித்தரித்தது. இவர்கள்தான் இப்போது அம்பேத்கருக்கு சொந்தம் கொண்டாடுகிறார்கள். அன்றைய மகாராஷ்டிரா காங்கிரஸ் முதல்வர் எஸ்.பி. சவான், இரு தரப்பினரையும் அழைத்துப் பேசி ஒரு உடன்பாட்டுக்கு வந்தார். இந்தத் தொகுப்பில் அம்பேத்கர் கட்டுரை இடம் பெறலாம். ஆனால் அந்தக் கருத்தோடு அரசுக்கு உடன்பாடில்லை என்ற அடிக்குறிப்பை சேர்க்க வேண்டும் என்று உடன்பாட்டுக்கு வந்தார்கள்.

கருத்துகளைக் கண்டே மிரளுகிறவர்கள் அதை சந்திக்க முடியாமல் அடக்குமுறை ஆயுதங்களை ஏந்துகிறார்கள். தமிழ்நாட்டில் பெரியாரின் பொன்மொழி, அண்ணாவின் ‘ஆரிய மாயை’, புலவர் குழந்தையின் ‘இராவண காவியம்’, ஏ.வி.பி. ஆசைத்தம்பியின் ‘காந்தியார் ஆன்மா சாந்தியடைய’ போன்ற பல நூல்கள் அன்றைய காங்கிரஸ் ஆட்சிகளால் தடை செய்யப் பட்டன. அப்போது காங்கிரஸ் பார்ப்பனிய கலாச் சாரத்திலே மூழ்கிக் கிடந்தது. வரலாறு இத்தடைகளை சுக்குநூறாக உடைத்தெறிந்திருக்கிறது. தமிழ்நாட்டுப் பல்கலைக்கழக பாடத் திட்டத்தில் ‘விசுவ இந்து பரிஷத்’ அத்துமீறி நுழைவதை தமிழர்களால் ஒரு போதும் அனுமதிக்க முடியாது.

எந்தநூலையும் தடை செய்யக் கூடாது என்பதே நமது கருத்து. மனித விரோதக் கருத்துகளைக் கொண்ட ‘மனுசாஸ்திரமும்’, ‘கீதை’யும்கூட தொடர்ந்து பதிப்புகளாக அச்சிடப்பட்டு வெளியிடப்படுவதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# அம்மை–பிளேக் நோய் பரவலுக்கு அந்தக் காலங்களில் மக்கள் காட்டிய எதிர்ப்புகள்

கடவுளின் அச்சத்தால் மதங்களைக் காட்டி மக்கள் மீது திணிக்கப்பட்ட மூடநம்பிக்கைகளும் அதில் மக்கள் சந்தித்த கடும் துயரமும் வரலாறு நெடுக நிகழ்ந்து வந்திருக்கின்றன. இந்த நம்பிக்கைகளை தகர்த்து எதிர்த்துதான் மனித சமூகம் முன்னேறிக் கொண்டிருக்கிறது. அந்தக் காலத்திலிருந்து இப்போது வரை மதங்களைப் புண்படுத்துகிறார்கள் என்று கூச்சல் மட்டும் மாறாமல் கேட்டுக் கொண்டே இருக்கிறது.

18ஆம் நூற்றாண்டிலும் 19ஆம் நூற்றாண்டிலும் போரைக் காட்டிலும் நோயால் உயிரிழந்தவர்களே அதிகம். புதுச்சேரியில் பிரெஞ்சு ஆட்சி காலத்தில் மொழி பெயர்ப்பு அதிகாரியாகப் பணியாற்றிய ஆனந்தரங்கம் பிள்ளை தனது டைரிகளில் பதிவு செய்துள்ள குறிப்புகள் இப்போது வரலாற்று ஆவணங்களாகப் பயன்படுத்தப்படுகிறது. புதுச்சேரியில் நோய்த் தொற்று பரவிய காலத்தில் மக்களிடம் கடவுள் பெயரால் நிலவிய மூடநம்பிக்கைகள் குறித்து ஆனந்தரங்கம் பிள்ளை தனது நாட் குறிப்பில் பதிவு செய் திருக்கிறார். அதிலிருந்து சில பகுதிகளை ‘தமிழ் இந்து’ நாளேடு (நவம்.8, 2020) ஒரு கட்டுரையாக வெளியிட்டிருக் கிறது. பேராசிரியர் எம்.பி.ராமன் எழுதியுள்ள அக்கட்டுரையின் சுருக்கமான கருத்துகள்:

- 1756இல் தமிழ்நாட்டில் ஆற்காடு, வேலூர், லால்பேட்டை வட்டாரங் களில் பெரியம்மை, பிளேக் நோயினால் 10-15 ஆயிரம் பேர் பலியானார்கள். ஆர்க்காட்டில் கடம்பை அம்மன் கனவில் தோன்றி, நான் அனைவரையும் கொன்று போட வந்திருக்கிறேன். யானை, குதிரை, ஆட்டுக்கிடா பலி கொடுப்பதோடு, மது, மாமிசம், 100 பானை சோறு போட வேண்டும் என்று கூறிய வதந்தி பரவியது. மற்றொரு அம்மன் குதிரை, யானைகளுடன், தீவட்டி ஏந்திய ஆட்களுடன், மேள தாளத்துடன் மைசூரிலிருந்து புறப்பட்டு, கடலில் குளியல் போட வந்து கொண்டிருப்பதாகவும் வழியில் அம்மன் திருவண்ணாமலையில் முகாமிட்டிருப்பதாகவும் வதந்தி பரவியது.

  மற்றொரு வதந்தி - மரக்கிளைகளில் அம்மன் வவ்வால் போல் தொங்கிக் கொண்டிருப்பதாகவும் உள்ளூர் தேவதைகள் அம்மனை எதிர்த்து சண்டை போடுவதாகவும் வதந்திகள் பரவின. இரவு முழுவதும் நடந்த சண்டையால் விடிந்து பார்த்தபோது எங்கும் இரத்தம் சிந்தி கிடக்கிறது என்றும், புளிய மரத்தில் யானை, குதிரைகளின் தலைகள் தொங்குகின்றன என்றும் புரளிகள் கிளம்பின. மக்களும் நம்பினார்கள். நாளுக்கு நாள் அம்மை, பிளேக் நோயால் மரணங்கள் நடந்து கொண்டே இருந்தன. 15,000க்கும் மேல் செத்து மடிந்தனர்.

- அய்யண்ண சாஸ்திரி என்பவர் வந்தவாசியைச் சார்ந்தவர், அரசுக்குக் கட்ட வேண்டிய வரிப் பணத்தை ஆட்கள் மூலம் கொடுத்தனுப்பினார். அந்த ஆட்களில் ஒருவன், “நான் தான் மாரியம்மன் வடிவில் வந்திருக்கிறேன். இந்தப் பணத்தை எனக்குக் காணிக்கையாக்கு” என்று மிரட்டவே, சாஸ்திரி அதை நம்பி பணத்தை அனுப்பவில்லை.

- அந்தக் காலத்தில் ஆளுநர்களும், கிறிஸ்தவ பாதிரியார்களும்கூட இந்த வதந்திகளை நம்பி அஞ்சியிருக் கிறார்கள்.

- 1849இல் காலராவுக்கு தடுப்பூசி அறிமுகமானது. மக்கள் ஊசி போட்டுக் கொள்ள முன்வரவில்லை. ஊசி போட்டுக் கொண் டால் ஒரு பணம் இலவசம் என்று அரசு ஆசை காட்ட வேண்டியிருந்தது. (இப்போது இலவசமாகவே கொரானா தடுப்பு ஊசி என்று தேர்தல் அறிக்கை யிலேயே பா.ஜ.க. கூறுகிறது)

- 1879இல் முதன்முதலாக அம்மை நோய்க்கு தடுப்பூசி போடும் முறை வந்தது. மாரியாத்தாளைப் புண்படுத்தும் தெய்வக் குற்றம் என்றுஅன்று இந்துக்கள் எதிர்த்தார்கள். சுகாதார ஊழியர்களை ஊருக்குள் விடாமல் தடுத்தார்கள். கீழ் ஜாதிக்காரனுக்கும் உயர்ஜாதிக்காரனுக்கும் சமமாக ஒரே ஊசியைப் போடுவதா என்று எதிர்த்தார்கள்.


- பிரெஞ்சு மூவண்ணக் கொடியின் கீழ் ஆளும் அரசு மாரியம்மன் பெயரால் வரும் எதிர்ப்பையும் நோய்த் தடுப்பையும் பொறுத்துக் கொள்ளாது என்று புதுச்சேரி ஆளுநர் கப்ரியேல் லூயி அன்முல்வான் 1906இல் தடுப்பூசியைக் கட்டாயமாக்கி ஆணை பிறப்பித்தார். ஆனாலும் மக்கள் ஏற்கவில்லை.

- 1930இல் முழுமையான மக்கள் இயக்கத்தைத் தடுப்பூசிக்காக நடத்தியும் வெற்றி பெற முடியவில்லை.

‘இந்துக்கள் நம்பிக்கை’, ‘இந்துக் கடவுள் அவமதிப்பு’ என்று இன்று சங்கிகள் போடும் கூச்சல், கடந்த காலங்களிலும் இப்படித்தான் மக்கள் முன்னேற்றத்துக்கும் உயிர் வாழ்க்கைக்கும் முட்டுக்கட்டைகளையும் அச்சுறுத்தலையும் ஏற்படுத்தியது.

காலத்தின் மாற்றம் மக்களை தடுப்பூசி களுக்கு தயார்ப்படுத்தியது. இப்போது அதே பழமைவாத கூட்டம் ‘மனுசாஸ்திரத்தை’ யும் ‘முருகனை’யும் வைத்துக் கொண்டு மக்கள் பிரச்சினைகளைவிட இவைதான் முக்கியம் என்று யாத்திரை போகிறது.

# பார்ப்பனத் தோழர்களுக்கு



பார்ப்பனத் தோழர்களே ! நான் மனிதத் தன்மையில் பார்ப்பனர்களுக்கு எதிரி அல்லேன். தமிழ்நாட்டிலேயே அநேக பார்ப்பனப் பிரமுகர்கள் – பெரியோர்கள் ஆகியோர்களுக்கு அன்பனாகவும், மதிப்புக்குரியவனாகவும் நண்பனாகவும் கூட இருந்து வருகிறேன். சிலர் என்னிடத்தில் அதிக நம்பிக்கையும் வைத்திருக்கிறார்கள்.

சமுதாய துறையில் பார்ப்பனர்கள் அனுஷ்டிக்கிற உயர்வு, அவர்கள் அனுபவிக்கிற அளவுக்கு மேற்பட்ட விகிதம் – ஆகியவைகளில்தான் எனக்கு வெறுப்பு இருக்கிறது. இது பார்ப்பனர்களிடம் மாத்திரமல்ல. இந்த நிலையில் உள்ள எல்லோரிடத்திலுமே நான் வெறுப்புக் கொள்கிறேன். இந்நிலை என்னிடத்தில் ஏற்பட்டிருப்பதற்குக் காரணம், ஒரு தாய் வயிற்றில் பிறந்த எல்லா மக்களுக்கும் சம அனுபவம் இருக்க வேண்டும் என்று கருதி, ஒன்றுக்கொன்று குறைவு, அதிகம் இல்லாமல் பார்த்துக்கொள்வது எப்படி ஒரு தாய்க்கு இயற்கை குணமாக இருக்குமோ, அதுபோலத்தான் எனக்கும் தோன்றுகிறது.

மற்றும் அந்தத் தாய் தனது மக்களில் உடல்நிலையில் இளைத்துப் போய், வலிவுக்குறைவாய் இருக்கிற மகனுக்கு, மற்ற குழந்தைகளுக்கு அளிக்கிற போஷணையை விட எப்படி அதிகமான போஷணையைக் கொடுத்து மற்ற குழந்தைகளோடு சரிசமானமுள்ள குழந்தையாக ஆக்க வேண்டுமென்று பாடுபடுவாளோ, அது போலத்தான் நான் மற்ற வலுக்குறைவான பின் தங்கிய மக்களிடம் அனுதாபம் காட்டுகிறேன். இந்த அளவுதான் நான் பார்ப்பனரிடமும், மற்ற வகுப்புகளிடமும் காட்டிக் கொள்ளும் உணர்ச்சி ஆகும்.

(‘விடுதலை’ 19.05.1948)

# பொழிலன், ஜான் மண்டேலா பிணையில் விடுதலை!

பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பு ஒருங்கிணைத்த தமிழ்நாடு விழா கொண்டாடியதற்காகக் கைது செய்யப்பட்டு மதுராந்தகம் கிளை சிறையில் அடைக்கப்பட்ட கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் பொழிலன் மற்றும் ஜான் மண்டேலா 10.11.2020 மாலை 6.00 மணியளவில் பிணையில் விடுதலையானார்கள்.

சிறையில் இருந்து விடுதலையானதும் மதுராந்தகம் நகரில் உள்ள புரட்சியாளர் அண்ணல் அம்பேத்கரின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

## பொருளியல் ஆய்வாளர் ஜெயரஞ்சன் விளக்கம் (4)

# தமிழ்நாட்டின் தனித்துவத்தை ஆழமாகப் புரிந்தால்தான் எதிர்ப்புகளை வீழ்த்த முடியும்

*திராவிட விழுதுகள் சார்பில் கோவையில் நடைபெற்ற கருத்தரங்கில் தமிழகப் பொருளாதாரம் கடந்த 50 ஆண்டுகளில் வளர்த்தெடுக்கப்பட்ட வரலாறுகள் குறித்து பொருளியல் ஆய்வாளர் ஜெயரஞ்சன் ஆற்றிய உரையின் தொடர்ச்சி:*

தமிழகத்தின் சிறந்த கட்டமைப்பு பொது விநியோகத் திட்டத்தில் அனைவருக்கும் உணவு கொடுக்கும் திட்டம். பொது விநியோகத் திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுவது போல இந்தியாவில் வேறு எங்கேயும் செயல்படுவதில்லை. இதில் முக்கியமானது என்னவென்றால், தமிழ்நாட்டில் மட்டும்தான் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டமே உள்ளது. கேரளாவையும் சேர்த்தே கூறுகிறேன். இடதுசாரிகள் ஆட்சி செய்யக்கூடிய கேரளாவிலும் கூட இலக்கு சார்ந்த பொது விநியோகத் திட்டம் தான் உள்ளது. யாரெல்லாம் ஏழைகளென்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளார்களோ அவர்களுக்குத்தான் பொது விநியோகத் திட்டம் மற்றவர்களுக்கு கொடுக்க மாட்டார்கள். தமிழ்நாட்டில் மட்டும் தான் மக்கள் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். பொருட்கள் வேண்டும் என்றால் வாங்கிக் கொள்ளலாம் வேண்டாம் என்றால் விட்டுவிடலாம். அப்படி இருந்தும் நம்மை வாங்கக் கூடாது என்று யாரும் தடுக்கவும் மாட்டார்கள். இதற்கு பெரிய வரலாறு உள்ளது. 1974ஆம் ஆண்டு ஆரம்பித்து தற்போது வரை வெற்றிகரமாக நடந்து கொண்டுள்ளது. மாணவர்களுக்கு உணவு கொடுப்பது போன்றே, யாரும் பசியுடன் படுக்கச் செல்லக்கூடாது என்ற நிலையை தமிழ்நாட்டில் உருவாக்கியிருக்கிறோம். இது போன்ற அமைப்பை உருவாக்குவது என்பது 50 வருட வேலை. இந்த வேலையை மிகவும் வெற்றிகரமாக செய்து காட்டியிருக்கிறோம். வேறு எந்த மாநிலமும் இதுவரை செய்துகாட்டவில்லை. இந்த அமைப்புகளெல்லாம் சேர்ந்துதான் தமிழ்நாடு முன்னணி மாநிலம் என்று சொல்லக் கூடிய நிலைக்கு உயர்த்தியுள்ளது.

இந்தியாவில், வட மாநிலங்களையும் தென் மாநிலங்களையும் எடுத்து ஒரு வரைபடம் வரைந் தோமென்றால், 1960,70,80,90 ஆகிய வருடங்களுக்கு தனிநபர் வருமானத்தை கணக்கிட்டோமென்றால் 1960, 70, 80 களில் பீகார் போன்ற மாநிலங்கள்கூட தமிழ்நாட்டை விட தனிநபர் வருமானத்தில் அதிகமாக இருக்கும். 1990களுக்குப் பிறகு மற்ற மாநிலங்களை விட தமிழ்நாட்டில் தனிநபர் வருமானம் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. மற்ற மாநிலங்களில் 1980களில் இருந்ததே தற்போது வரை இருந்து வருகிறது. எனவே, இவ்வளவு அதிகமான மாணவர்கள் படிப்பது, வேறு வகைகளில் வருமானம் வருவது போன்றவற்றால் கூலி வேலைகள் செய்வதற்கான ஆட்கள் தமிழ்நாட்டில் இல்லை. கூலி வேலைகளை செய்ய வேலையாட்கள் இல்லாத காரணத்தினால், தனிநபர் வருமானம் வளராமல் இருக்கிற மாநிலங்களில் உள்ள மக்கள் தமிழ் நாட்டில் கூலி வேலை செய்ய வருகிறார்கள். வெளிமாநில தொழிலாளர்கள் இல்லையென்றால் தமிழ்நாட்டில் எந்த வேலைகளும் நடைபெறாது. அப்படித்தான் தற்போதைய நிலவரம் உள்ளது. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தில் ஒரு தமிழர்கூட வேலை செய்யவில்லை. உடனே சிலர் கூறுவார்கள், தமிழர்கள் டாஸ்மாக்கில் மது வாங்கி அருந்திவிட்டு ரேசன் அரிசியை சாப்பிட்டுவிட்டு உறங்கி விட்டார்கள் என்று. அப்படி இருந்திருந்தால் நான் ஏற்கனவே கூறியதைப் போல 100 ரூபாய் வருமானத்தில் 30 ரூபாய் விவசாயத்தில் இருந்து மட்டும் வர முடியுமா? எப்படி ஒரு சிலர் எண்ணுகிறார்களென்றால், கொஞ்சம் பொருளாதாரம் சேர்ந்து விட்டால் மற்றவர்கள் அவர்களிடம் வேலை கேட்டு நிற்க வேண்டும் என்று எண்ணுகிறார்கள். தமிழ்நாட்டில் டாஸ்மாக்



கருப்புக்கும் காவிக்கும் சண்டை யெல்லாம் இல்லை. நாம் உருவாக்கி வைத்துள்ள கட்டமைப்புகளை அழித்து ஒழிப்பது தான் அவர்களின் தீர்மானமான முடிவு.

இருப்பது உண்மைதான். அதிகமாக மது அருந்துகிறார்கள் என்பதும் உண்மை தான். ஆனால் அப்படி இருந்தும் யாரும் பெரும்பாலானவர்கள் வேலைக்குச் செல்லாமல் இல்லை.

இந்த வளர்ச்சிகளெல்லாம் எப்படி சாத்தியமானதென்றால்? முதல் காரணம் ‘சுயமரியாதை’. சுயமரியாதைக்கு நீண்ட நெடிய வரலாறு இருக்கிறது. தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து முயற்சிகளும், திட்டங்களும் சுயமரியாதைக்கான திட்டங்கள் தான். தமிழ்நாட்டில் அதிகமான, பள்ளி, கல்லூரிகள் திறந்ததெல்லாம் எதற்கு? சுயமரியாதைக்குத்தான். தற்போது நீங்கள் பார்த்திருக்க மாட்டீர்கள், நான் படிக்கும்போது எனது தலைமை ஆசிரியர் பள்ளியில், ‘நீங்களெல்லாம் எதுக்குடா படிக்க வற்ரீங்க’ என்று கேட்பார். ஏனென்றால், நீங்கள் படிக்கத் தகுதியான ஆட்கள் கிடையாது என்று அர்த்தம். படிக்கத் தகுதியான ஆட்கள் யாரென்றால், அக்ரஹாரத்தில் உள்ள ஆட்கள் தான் படிக்கத் தகுதியானவர்கள். அப்படியான நிலைதான் திமுக ஆட்சிக்கு வந்த பின்பும் இருந்தது. அந்த காலகட்டங்களில் பார்ப்பனரல்லாத மாணவர்கள் ஆசிரியர்களால் நிறைய அவமானப்படுத்தப்பட்டனர். ஒரு புறம் சமுதாயம் மாணவர்களை பள்ளியில் இருந்து வெளியேற்ற முயற்சி செய்கிறது. அரசு அவர்களை மீண்டும் படிக்க பல திட்டங்களைக் கொண்டு வருகிறது.

இட ஒதுக்கீட்டை மிகக் கடுமையாக செயல்படுத்தியதன் விளைவு அதிகாரத்தில் இருந்தவர்களை இறக்கி மாற்றத்தைக் கொண்டு வந்துவிட்டார்கள். காவல், வருவாய், விவசாயம் ஆகிய அரசுத் துறைகளில் சூத்திரர்கள் அதிகாரத்தில் அமர்ந்தார்கள். பழைய தலைமை செயல் அதிகாரி நாராயணன் 'Dravidian Years' என்று ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அதில் ‘கலைஞர் செய்த முக்கியமான சாதனையாக அவர் ஒன்றைக் குறிப்பிடுகிறார். 1969 முதல் 76 வரை அரசு நிர்வாகத்தில் அனைத்து தரப்பினருக்கும் பங்கு என்பதை உறுதி படுத்தி விட்டார்’. அதுதான் இன்னமும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. இவற்றை சட்ட மன்றத்தில் பேசிவிட்டு கலைஞர் செய்யவில்லை.

ஒரு திட்டம் புதியதாக செயல்படுத்துவதற்கான கலந்துரையாடல் டெல்லியில் நடைபெறுகிறதென்றால், தமிழ்நாட்டைப் பொருத்தவரை ‘No Need to Report’ என்று தான் சொல்வார்கள். ஏனென்றால் நாம் செயல்படுத்தியதுபோல வேறு எந்த மாநிலங்களும் செயல்படுத்தியிருக்க முடியாது. இதற்கான காரணம் என்னவென்றால் பிரதிநிதித்துவம் தான். அரசுத் துறைகளில் அனைத்து மக்களும் அதிகாரம் பெற்றதே முதல் காரணம். அதற்காக யாரும் பணமே வாங்கவில்லை என்று நான் கூறவரவில்லை ஆனால், அவர்கள் அர்ப்பணிப்புடன் காரியங்களை செய்வார்கள். அதன் விளைவு தான். இதற்கு இரண்டு சிறப்பான எடுத்துக்காட்டுக்களைக் கூறலாம். ஒன்று, தமிழ்நாடு மருத்துவக் கழகம் எப்படி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை கூறினேன். மற்றொன்று, எம்.ஜி.ஆர் சட்டமன்றத்தில், ‘வரும் மாதத்தில் இருந்து பள்ளி மாணவர்களுக்கு அரசு சார்பில் மதிய உணவு வழங்கப்படும்’ என்று அறிவித்துவிட்டார். பள்ளிகளில், சமையலர் இருக்கிறாரா? போதுமான அரிசி உள்ளதா? என்று எதையும் கவனிக்காமல் அறிவித்தார். அறிவித்து விட்டு தலைமை செயல் அதிகாரியை அழைத்து கேட்கிறார் எப்படி நடைமுறைபடுத்துவது? என்று தலைமை செயல் அதிகாரி தற்போது நடைமுறைப் படுத்த முடியாது என்று கூறுகிறார். அப்போது வேறு ஒரு அதிகாரியை அழைத்து கேட்கிறார் அவர் நடைமுறைபடுத்த முடியும் என்று முழு திட்டத்தையும் வகுத்துக் கொடுக்கிறார் அவர்தான் திரவியம், ஐ.ஏ.எஸ். அதேபோல், மண்டல் குழுவின் வழக்கு உச்சநீதிமன்றத்தில் நடைபெற்றது; அதற்கான தீர்ப்பு வழங்கியவர் யார்? நீதியரசர் ரத்தினவேல் பாண்டியன். 1967இல் திமுக வேட்பாளர். தோற்றுப் போன வேட்பாளர். யார் யார் எங்கு அதிகாரப் படுத்தப்பட வேண்டுமோ அதுபோல அதிகாரப் படுத்தப்பட்டார்கள் அதன் விளைவுகளை நாம் பார்த்துக்கொண்டு தான் இருக்கிறோம்.

இறுதியாக நான் கூற வருவது என்னவென்றால், இது போன்ற நிறைய திட்டங்கள் உள்ளன. இந்த திட்டங்களை செயல்படுத்துவதற்கு நம்மிடம் ஒரு கற்பனை உள்ளது. இந்தியாவில் அப்படி கற்பனையுடன் கூடிய இனக்குழுக்கள் மிக மிக குறைவுதான். அதில் நமக்கு மிகப்பெரிய கொடை என்னவென்றால், தந்தை பெரியார் நமக்கு (தமிழ்நாட்டிற்கு) கிடைத்த மிகப் பெரிய கொடை. அவருக்கு ஒரு மிகப் பெரிய கற்பனை. அது என்ன கற்பனை ? ஒருவனை ஒருவன் தாழ்வாக நினைக்காமல் ஒரு சமுதாயம் கட்டமைக்கப்பட வேண்டும். அதுதான் அவரது கற்பனை. அதற்கு அவர் வைத்த பெயர் சுயமரியாதை. அவர் சொல்லிக் கொடுத்த சுயமரியாதை தற்போது வரை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. அந்த சுயமரியாதை பல வடிவங்களில் வெளிப்படுகிறது. கருப்புக்கும் காவிக்கும் சண்டையெல்லாம் இல்லை. நாம் உருவாக்கி வைத்துள்ள கட்டமைப்புகளை அழித்து ஒழிப்பது தான் அவர்களின் தீர்மானமான முடிவு. தினம் தினம் தாக்கிக் கொண்டே உள்ளனர். மதிய உணவுத் திட்டமா; ஹரே கிருஷ்ணாவை கொண்டு வருகிறார்கள். அதிகமான மருத்துவர்களை தமிழ்நாடு கொண்டுள்ளதா ‘நீட்’ தேர்வு. உதவித் தொகையை வைத்துத் தானே அதிகம் பேர் தமிழகத்தில் படிக்கிறார்கள் அந்த உதவித் தொகையை நிறுத்துகிறார்கள். ஊரில் ஒரு பழமொழி சொல்வார்களே, ‘கொதிக்கிற எண்ணெய் அடங்க வேண்டுமானால் எரிவதை உருவ வேண்டும்’ அதுபோல நமது அடிப்படை கட்டமைப்புகளை ஒவ்வொன்றாக உருவிக் கொண்டே இருக்கிறார்கள். இதைத் தாங்கக் கூடிய வலிமை யாருக்கு இருக்க வேண்டும். மாநில அரசு தான் இதை எதிர்த்து கேட்க வேண்டும். அப்படி இருக்கிறதா தமிழ்நாட்டில் உள்ள அரசு ? இதுதான் வேதனையளிக்கக்கூடிய கேள்வி. மதிய உணவுத் திட்டத்தை நிறுத்தி ஏன் ஹரே கிருஷ்ணாவிடம் கொடுக்கிறீர்கள் என்று கேட்டால், நிதி இல்லை என்று அரசு அதிகாரி பதில் சொல்கிறார். யார் பதில் தர வேண்டும்? அமைச்சர் தானே பதில் தர வேண்டும். மக்களின் பிரதிநிதி யார் ? அமைச்சர் தானே. அமைச்சர் சொல்வதை செயல்படுத்துபவர் தான் அதிகாரி. அமைச்சர்கள் ஓடி ஒளிந்து கொள்கின்றனர்.

எனவே, தமிழ்நாட்டில் நிலைமை எந்தளவிற்கு மோசமடைந்துள்ளது என்பதை நாம் கவனித்துப் பார்க்க வேண்டும். நீங்கள் இருக்கும் பகுதியில் உங்கள் அளவிற்கு தகவல் தெரிந்தவர் இருக்கக் கூடாது. அந்த அளவுக்கு நாம் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படி இருந்தால் தான் நம்மால் வாளை வீச முடியும். பொறுப்புணர்ந்து ஒன்றாக செயல்படுவோம் என்று கேட்டு விடைபெறுகிறேன்.

(நிறைவு)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# கருஞ்சட்டைத் தோழர்களின் நேர்மைக்கும் துணிவுக்கும் ஒரு சான்று

1957 நவம்பர் 26 அன்று ஜாதியைப் பாதுகாக்கும் அரசியல் சட்டப் பிரிவுகளை தீயிட்டுப் பொசுக்கும் போராட்டத்தை பெரியார் அறிவித்தார். 10,000 கருஞ்சட்டைத் தோழர்கள் எரித்தனர். 3000 பேர் கைது செய்யப்பட்டு 6 மாதத்திலிருந்து 3 ஆண்டுகள் வரை சிறைபடுத்தப்பட்டனர். எவரும் எதிர் வழக்காடவில்லை. சட்டத்தை எரித்த ஏராளமான தோழர்களை காவல்துறை கைது செய்யவில்லை. இந்த நிலையில் குடந்தை அருகே சோழபுரம் கிராமத்தில் சட்டத்தை எரித்துவிட்டு காவல்துறை தங்களைக் கைது செய்யாததைக் கண்டித்து கருஞ்சட்டைத் தோழர்கள் அன்றைய உள்துறை அமைச்சருக்கு கடிதமே எழுதியிருக்கிறார்கள். 99 தோழர்கள் இணைந்து எழுதிய கடிதம் இது. அன்றைய ‘விடுதலை’ நாளேடு வெளியிட்ட செய்தியைக் கீழே தருகிறோம்:

**சர்க்காரின் சங்கட நிலைமை !**

**சட்டம் எரித்த எங்களை ஏன் கைது செய்யவில்லை ?**

**உள்நாட்டு அமைச்சருக்கு 99 பேர் விடுத்த மனு !**

சோழபுரம், நவ.30:-

சென்னை மாநிலம் கனம் உள்நாட்டமைச்சர் அவர்களுக்கு சோழபுரம் திருப்பனந்தாள் வட்ட கிராமத்தினர் எழுதிக் கொள்வது :

இதனடியில் கையொப்பமிட்டுள்ள நாங்கள் திராவிட நாட்டின் ஒப்பற்றத் தலைவர் பெரியார் அவர்களின் கட்டளைப்படி 26.11.1957 இந்திய அரசியல் சட்டத்தின் அச்சுப்பிரதிகளை ஆயிரக்கணக்கான பொதுமக்களின் முன்னிலையிலும், போலீஸ் அதிகாரிகள் முன்னிலையிலும் கொளுத்தினோம். அப்படிக் கொளுத்திய 139 பேர்களை போலீஸ் ஸ்டேசனுக்கு (திருப்பனந்தாள்) அழைத்துச் சென்றனர்.

பிறகு இரவு 9.30 மணிக்கு கும்பகோணம் தாலூக்கா திருப்பனந்தாள் போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் எங்களில் 40 பேர்களை மட்டும் எடுத்துக் கொண்டு மீதியுள்ள 99 பேர்களையும் கைது செய்ய முடியாது ; வீட்டுக்குப் போங்கள் என்று கூறிவிட்டார். ‘ஏன்’ என்று கேட்டதற்கு ‘நீங்கள் கொளுத்தியதை நான் பார்க்கவில்லை. அதனால் உங்களைக் கைது செய்ய முடியாது’ என்று பச்சையாகப் பொய் சொல்லிவிட்டார்.

உடனே நாங்கள் ‘அப்படியானால் இப்போது உங்கள் எதிரிலேயே கொளுத்துகிறோம். இப்போது கைது செய்யுங்கள் என்று கூறியதற்கும் இரவாகிவிட்டது, இனி கொளுத்தினாலும் கைது செய்ய முடியாது’ என்று கூறி விட்டார்.

அதன் பேரில் எங்கள் தலைவரின் கட்டளைப்படியே இந்திய அரசியல் சட்டத்தின் அச்சுப் பிரதிகளைக் கொளுத்தி அதன் சாம்பலை தேசிய கௌரவ சட்டம் கொண்டுவந்த அமைச்சராகிய தங்களுக்கு அனுப்பியுள்ளோம்.

மேற்படி நிகழ்ச்சிகள் நடந்ததை மேற்படி தொகுதி சென்னை சட்டசபை உறுப்பினர் உயர்திரு. இராமாமிர்தத் தொண்டமான் அவர்களும் நேரிலேயே கண்டார்கள்.

என முகவரியுடன் 99 பேர் கையொப்பமிட்டு அனுப்பியுள்ளனர்.

(‘விடுதலை’ 30.11.1957)

சட்டத்தை எரித்தோம்; எங்களை ஏன் கைது செய்யவில்லை என்று கைதுக்கே போராடிய தீரர்களின் பாசறையாக பெரியாரின் கருஞ்சட்டைப் படை திகழ்ந்தது என்ற வரலாறு ஒரு பக்கம்.

பிரிட்டிஷாரிடம் மன்னிப்புக் கடிதங்களை எழுதிக் குவித்த சாவர்க்கர்களுக்கு ‘வீர’ சாவர்க்கர் பட்டம் தந்து கொண்டாடும் கூட்டம் மற்றொரு பக்கம்!

# பழங்குடி மக்களிடம் ஜாதியைத் திணித்து ‘பிராமணர்’களை உருவாக்கிய இந்து அமைப்புகள்



***நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தில் ‘ஏ.பி.வி.பி.’ மிரட்டி தடை செய்த ‘அருந்ததிராய் தோழர்களுடன் ஒரு பயணம்’ நூலிலிருந்து ஒரு பகுதி.***

வெள்ளையர்கள் ’கோண்டுவானா’ என்றழைத்த கோண்டுகளின் நிலத்தின் ஒரு பகுதி தான் இன்று ’தண்டகாரண்யா’ என அழைக்கப்படுகிறது. மகாராஷ்டிரா, ஆந்திரா, ஒரிசா, மத்திய பிரதேஷ், சட்டிஸ்கர் ஆகிய மாநிலங்களின் பல பகுதிகளில் இதில் அடங்குகிறது. பிரச்சனைக்குரிய பகுதியை வெவ்வேறு நிர்வாகப் பகுதிகளின் கீழ் பிரிப்பது ஒரு பழைய தந்திரம். ஆனால் மாவோயிஸ்டுகள் மற்றும் கோண்டு மாவோயிஸ்டுகள் இந்த மாநில எல்லைகளைக் கண்டு கொள்வதில்லை. அவர்களின் மனங்களில் வேறு ஒரு வரைபடம் தான் உள்ளது. காடுகளில் வசிக்கும் மற்ற பிராணிகளைப் போல இவர்களிடமும் தனித்துவமான பல பாதைகள் உள்ளது. அவர்களை பொறுத்தவரை சாலைகள் நடப்பதற்கான வழிகளாக இல்லை. அவைகள் கடந்து செல்ல பயன்படுத்தப்படுகிறது அல்லது காவல்துறையினரை வழிமறித்து பதுங்கி பாய்வதற்கே உபயோகமாக விளங்குகிறது. கோண்டுகள் தான் அங்குள்ள பெரும்பான்மை சமூகம் (அவர்களில் கோயா, டொர்லா பிரிவுகள் உள்ளன) என்ற போதிலும் வேறு சிறு சிறு பிரிவுகளும் அங்கு உள்ளன. வியாபாரிகள், குடியேறியவர்கள் என ஆதிவாசிகளாக சாலைகளிலும் சந்தைகளிலும்தான் வாழ்கிறார்கள்.

PWG ஒன்றும் தண்டகாரண்யா காட்டுப் பகுதிக்கு வந்த முதல் குழு அல்ல. அவர்களுக்கு முன்பே புகழ்பெற்ற காந்தியவாதியான பாபா ஆம்தே அங்கு வந்து தனது ஆசிரமத்தையும் தொழு நோய் மருத்துவமனையையும் 1975இல் வரோராவில் தொடங்கினார்.

அபுஜ்மத் வனப்பகுதியில் இராம கிருஷ்ணா மிஷன் தனது பள்ளிகளை நிறுவியது. **பஸ்தரின் வட பகுதியில் பாபா பீகாரி தாஸ் பழங்குடியினரை இந்துக்களாக மாற்றும் தனது பணியை முழு வீச்சில் நடத்தி வந்தார். அந்த பிரச்சாரத்தின் மூலம் பழங்குடி கலாச்சாரத்தை முதலில் மதிப்பிழக்கச் செய்தார்கள். பின்னர் மனங்களில் வன்மத்தை விதைத்தார்கள்.** அதன்பின் இந்து மதத்தின் பெரும் வரமான ஜாதியை அறிமுகப் படுத்தினார்கள். முதன் முதலில் இவ்வாறு கிராம பெரியவர்களையும் நிலக்கிழார்களையும் மாற்றினார்கள். **சல்வா ஜூதும் என்ற பிரிவைத் தொடங்கிய (போராளிகளைக் காட்டிக் கொடுக்கும் குழு) மகேந்திர சர்மா போன்றவர்களுக்கு ‘துவிஜத்’ பதவி வழங்கப் பட்டது** - அதாவது இருமுறை பார்ப்பனராக பிறந்தவர். (இது ஒரு பெரும் மோசடியே ஏனெனில் யாராலும் பார்ப்பனராக மாற முடியாது). ஆனால், இந்த போலி இந்துத்துவம் பழங்குடியினருக்கு போதுமானது. அங்கு விற்கப்படும் போலி சோப், தீப்பெட்டி, எண்ணெய், பிஸ்கட்களைப் போல. இந்த இந்துத்துவா மாற்றத்தின் ஒரு பகுதியாக கிராமங்களின் பெயர்கள் எல்லாம் நில ஆவணங்களில் மாற்றப் பட்டது. அதன் பயனாக இப்பொழுது பல கிராமங்களுக்கு இரண்டு பெயர்கள் உள்ளது மக்களிடம் புழங்கும் பெயர், மற்றொன்று அரசாங்கப் பெயர். உதாரணத்திற்கு ‘இன்னார்’ கிராமம் ‘சின்னாரி’யாகிப் போனது. வாக்காளர் பட்டியலிலும் பெயர் மாற்றம் நிகழ்ந்தது. ’மாசா சர்மா’ ‘மகேந்திர கர்மா’ வாக உருமாறினார். இப்படி இந்துக்களாக மாற மறுத்தவர்கள் அனைவரும் தீண்டத் தகாதவர்களாக அறிவிக்கப்பட்டனர். இவர்கள் தான் பின்பு இயற்கையாகவே மாவோயிஸ்டுகளின் தொகுதியாகிப் போனார்கள்.

## வினா – விடை

- உள்துறை அமைச்சர் அமீத்ஷா தமிழகம் வருகிறார் என்றவுடனேயே எதிர் கட்சிகள் பயந்து நடுங்குகின்றன.
  **– பா.ஜ.க. தலைவர் முருகன்**

  அப்படியே சீன எல்லைக்கும் அவர் விமானத்தைத் திருப்புங்க... சீன இராணுவமே ஓட்டமெடுத்து விடும்.

- திருச்செந்தூர் – திருவண்ணாமலை திருவிழாக்களுக்கு பக்தர்கள் வர வேண்டாம். **– தமிழக அரசு அறிவிப்பு**

  பக்தர்கள் அரசு பேச்சைக் கேட்பார்கள்; அவர்கள் ஒன்றும் பா.ஜ.க. அல்ல.

- நான் ஊழல் செய்யவில்லை; பதவி விலக மாட்டேன்.
  **– துணைவேந்தர் சூரப்பா**

  ம்... ம்... பஞ்சாயத்தை கலையுங்க... முடிஞ்சு போச்சு; கிளம்பு... கிளம்பு...

- நித்திஷ் குமார் கூட்டணி மகாபந்தன் கூட்டணியைவிட கூடுதலாகப் பெற்றது 12,270 வாக்குகள்தான். **– தேஜஸ் யாதவ் பேட்டி**

  எங்கேயோ, தேர்தல் ஆணையம் கோட்டை விட்டுவிட்டது; அடுத்து வரும் தேர்தலில் சரி செய்து விடலாம்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம் ரூ.200
தொடர்புக்கு: ✆ 7373684049
கரூர் வைஸ்யா வங்கி, அடையாறு கிளை
Karur Vysya Bank, Adyar Branch
‘கரண்ட்’ அக்கவுண்ட் எண் :
Current Acct No.: 1257115000002041
IFSC : KVBL0001257

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 19th November 2020

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN